சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 42/2021

பெயர் திரு. தினகரன் நாள். 09.03.2026
த/பெ. எல்லப்பன்

**<u>1 முதல் 8 பிரதிவாதிகள் சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. 2 முதல் 6 பிரதிவாதிகளுக்கு முதல் விசாரணை வாக்குமூலம் விசாரணைகள் தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சொத்து எந்த வழியில் என் தகப்பனாருக்கு சொந்தம் என்றால் பூர்வீக வழியில் சொந்தம். அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பட்டா எண். 525 என் தகப்பனாருக்கு வழுங்கப்பட்டதர்கான உத்தரவு நகல் மற்றும் விசாரணை நகல் தாக்கல் செய்யவில்லை. என் தகப்பனார் 2018 ம் வருடம் இறந்து போனார். என் தகப்பனார் வழக்கு சொத்தை அனுபவம் செய்ததற்கு வரி ரசீதுகள் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு வரி ரசீதுகள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1366 பசலி பாக்கியம்மாள் மகன் கிருஷ்ணன் பெயரில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்திற்கான முந்தய விவரம் மற்றும் வரலாறு எனக்கு தெரியாது. என் தகப்பனார் பெயருக்கு பட்டா மாற்றம் செய்வதற்கு முன்பே பாக்கியம்மாள் பெயரில் பட்டா இருந்தது என்று சொன்னால் எனக்கு தெரியாது.

2. அதன் பட்டா எண். 1431, 1961ம் ஆண்டு கிருஷ்ணன் மனைவி பாக்கியம்மாள் பெயரில் இருந்தது என்றால் தவறு. பாக்கியம்மாள் வாதிகளின் பாட்டி என்று சொன்னால் சரிதான். கிராமத்தில் எனக்கு பூர்வீக சொத்துக்கள் இல்லை என்றால் என்னால் சொல்ல இயலாது. என் தகப்பனார் கிரையம் வாங்கிய 164 சென்ட் மட்டும் தான் வழக்கு கிராமத்தில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. அந்த சொத்துக்களை தவிர வேறு சொத்துக்கள் எங்கள் குடும்பத்திற்கு உள்ளது என்று சொன்னால் சரியல்ல. புல எண். 715/6 ல் மொத்தம் 28 சென்ட் என்று சொன்னால் சரிதான். அந்த சொத்தில் UDR ல் 15 சென்ட் என் தகப்பனார் பெயரில் தவறாக பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

3. அது சம்மந்தமாக வாதிகளுக்கும் என் தகப்பனாருக்கும் இடையே பேச்சு வார்த்தை நடைப்பெற்றது என்று சொன்னால் சரியல்ல. அந்த பேச்சு வார்த்தையில் வாதிகளின் சொத்தின் பக்கத்தில் 9 சென்ட் வீட்டுமனையை மாற்று ஏற்பாடாக கொடுத்ததாக பேசப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் இறக்கும் வரை வழக்கு சொத்தை குறித்து எவ்வித ஏற்பாடும் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதியின் பாட்டி பெயரில் பைமாஷ் 3729/3 அவர் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை குறித்து என் தகப்பனார் எவ்வித வில்லங்கமோ வங்கிக் கடனோ பெறவில்லை என்றால் சரியல்ல. அதற்கான ஆவணங்கள் உள்ளது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

4. வழக்கு சொத்து எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் என் தகப்பனார் மூலமாக கிடைத்தது. வழக்கு சொத்து யார் அனுபவத்தில் உள்ளது என்றால் எல்லப்பன் வாரிசுகளான குமார், ரங்கநாதன் மற்றும் என் அனுபவத்தில் உள்ளது. அது தவறு என்று சொன்னால் சரியல்ல. விடுதலை பத்திரம் மூலமாகவும் வழக்கு சொத்து எங்களுக்கு கிடைத்தது என்று சொன்னால் சரிதான். என் தகப்பனார் இறந்த பிறகு கூட்டாக அனுபவம் செய்து வருவதாக கூறுவது உண்டா என்றால் சரிதான். பாக்கியம்மாள் சொத்தை வாதிகள் கூட்டாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் தவறு.

5. வழக்கு சொத்தில் நாங்கள் அனுபவம் செய்தோமா என்றால் இன்றைய தேதி வரை அனுபவம் செய்து வருகிறோம். வழக்கு சொத்தை அனுபவம் செய்ததற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை நான் அனுபவைக்க கூடாது என்று போலீசார் கூறினார்கள் என்றால் சரியல்ல. காவல்நிலையம் சென்றேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் உள்ள மரங்களை வெட்டியதால் தான் காவல் நிலையம் சென்றேன் என்றால் வாதிகள் வழக்கு சொத்தில் கொட்டகை போட சென்றதால் காவல் நிலையம் சென்றேன். என் தகப்பனார் பெயரில் உள்ள பட்டாவை 1ம் வாதி மனு அளித்து விசாரணை செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. அதில் எங்களுக்கு அழைப்பாணை அனுப்பட்டது என்றால் சரியல்ல. அந்த விசாரணை எங்களால் கால தாமதம்

படுத்தப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. முதல் விசாரணையில் 3ம் ஆவணமாக குறிப்பிடப்பட்டுள்ளது சரிதான். அதில் குறிப்பிடப்பட்டுள்ள பாக்கியம்மாள் என்பவர் வேறுநபர். முதல் விசாரணையில் எல்லப்பன் புஞ்சைக்கு கிழக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவ்வாறு கற்பனையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து முழுவதும் வாதிகளுக்கே சொந்தம் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் பாக்கியம்மாள் பெயரில் உள்ள பட்டா உள்ளது என்றால் சரியல்ல. வாதிகள் தரப்பில் தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை–இல்லை**